2025 – அக்டோபர் மாதம் 09– ஆம் தேதி *வியாழக்கிழமை*

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 328/2024*

*2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W1, வள்ளி |
| கணவர் பெயர் | : | சுப்ரமணியன் |
| ஊர் | : | அரணாரை |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | – |
| வயது | : | 67 |

<u>தேதி: 09.10.2025.</u>

<u>முதல் விசாரணை:–</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பில் ம.சா.1 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்படும் பின் வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

<u>எனது சார்பாக:–</u>

1). 19.11.2024–ம் தேதியன்று நடைபெற்ற விபத்து தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகலை தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

2). 18.11.2024–ம் தேதி முதல் 24.11.2024–ம் தேதி வரை நான் பெரம்பலூர் SPT மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

3). மேற்படி SPT மருத்துவமனையில் சிகிச்சைக்காக செலுத்தப்பட்ட மருத்துவ கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 25 ) தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

4). எனது ஆதார் அட்டையின் அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்ட நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**( மேற்படி ம.சா.ஆ.3 சான்றாவணம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் மேற்படி பேருந்தில் இலவச பயணம் செய்ததால் இலவச பயணச்சீட்டு கொடுத்தார்கள். ஆனால் அதை நான் தாக்கல் செய்யவில்லை. பேருந்து எதிலும் சென்று மோதவில்லை. பேருந்தின் சக்கரம் வெடித்தது மட்டுமே எனக்கு தெரியும். அது எவ்வளவு தூரத்தில் சென்று நின்றது என்றால் வெடித்த இடத்திலேயே பேருந்து நின்றுவிட்டது. நான் சொல்வது போல் விபத்தானது பேருந்து ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும் அதிவேகத்தாலும் ஏற்படவில்லை என்றும் அசாதாரண சூழ்நிலையின் காரணமாக பேருந்தின் டயர் வெடித்ததால் மட்டுமே விபத்து நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றும் அவை சிகிச்சையின் போதே பூரண குணமடைந்துவிட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் வீட்டு குடித்தனம் என்றால் சரி. ம.சா.ஆ.3 மருத்துவ கட்டண ரசீதுகள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வருமான இழப்பு எதுவும் இல்லை என்று சொன்னால்

சரியல்ல. நான் கோருகின்ற இழப்பீடு அதிகமானது என்றும் என்னுடைய மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை.</u>**

**ஒப்பம்/–கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**